# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 08 செவ்வாய்க்கிழமை 21.05.2024 கதிர் 263



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
Yarl Muttram
Youtube Channel



# முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வருடத்திற்கு 120 மில்லியன் நிதி செலவிடும் அவலம் இலங்கையில்தான் நிலவுகின்றது

## 68 வீத மக்களோ உணவின்றி தவிக்கின்றனர் என்கிறார் அனுரகுமார



**முன்னாள் ஜனாதிபதிகளின் சம்பளத்திற்காக வருடாந்தம் 120 மில்லியனுக்கும் அதிகமான தொகையை செலவிடப்படும் இலங்கையில் 68 வீதமான மக்கள் உணவின்றி தவித்து வருகின்றனர் என தேசிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

**மேலும் அவர் தெரிவிக்கையில்- “இலங்கையில் 68 வீதமானோர் இரண்டு வேளை உணவை மட்டுமோ அல்லது சத்தற்ற மூன்று வேளை உணவையோ அப்படியும் இல்லாவிட்டால் ஒரு வேளை உணவை மாத்திரமோ உண்ண பழகிக் கொள்ள வேண்டியுள்ளது. மத்திய வங்கியின் தரவுகளும் இதனை உறுதிப்படுத்தியுள்ளது.**

2➤



# சுவிஸ் தூதுவர் – மனோ சந்திப்பு பல விடயங்கள் தொடர்பில் பேச்சு

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பியை, இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதுவர் கலாநிதி திருமதி சிரி வோல்ட் சந்தித்து உரையாடியுள்ளார்.

மனோ எம்.பியின் இல்லத்தில் நிகழ்ந்த இந்தச் சந்திப்பில் சுவிஸ் தூதரகத்தின் அரசியல்துறை முதலாம் செயலாளர் செல்வி ஜஸ்டின் பொய்லாவும் கலந்துகொண்டார்.

இது தொடர்பில் மனோ எம்.பி. தனது எக்ஸ்-தளத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:-

“நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், அரசியல் தீர்வு, மலையக சமூகத்தைச் சார்ந்த பெருந்தோட்டப் பிரிவினரின் வாழ் நிலைமை ஆகியவை பற்றி சுவிட்சர்லாந்து தூதுவர் சிறி வோல்ட், அரசியல்துறை முதலாம் செயலாளர் ஜஸ்டின் பொய்லா ஆகியோரும், நானும் மிக விரிவாக உரையாடினோம்.

உண்மை, ஐக்கியம், நல்லிணக்கம் பற்றிய மசோதா மூலம் இலங்கை அரசு கொண்டுவர முயலும் உண்மை ஆணைக்குழு பற்றி பேசினோம். ஆனால், அரசியல் தீர்வு, பொறுப்புக்கூறல் ஆகிய இரண்டு விடயங்களிலும் எவ்வித அர்த்தபூர்வ முன்நகர்வும் அரச தரப்பில் செய்யப்படாத காரணத்தால், நல்லிணக்கம் இன்னமும் சாத்தியம் ஆகவில்லை. இவை இத்தனை தூரம் இழுப்பட்டுப் போவதற்குச் சர்வதேச சமூகமும் காரணமாக அமைந்து விட்டது.

2➤

# உத்தேச பொருளாதார பரிவர்த்தனைக்கான சட்டத்தினால் நெருக்கடி நிலை ஏற்படலாம்

## முதலீட்டுச் சபை தொழிற்சங்கம் தெரிவிப்பு

உத்தேச பொருளாதார பரிவர்த்தனைக்கான சட்டத்தினால் இலங்கையின் முழு முதலீட்டுத் துறையும் நெருக்கடிக்கு உள்ளாகும் என இலங்கை முதலீட்டுச்சபை கூட்டுத்தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

எனவே, நாளை (22) நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள சட்டமூலத்திற்கு தொழிற்சங்கம் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளதுடன், முதலீட்டுத் துறையில் நிபுணர்களையோ அல்லது முதலீட்டாளர்களையோ கலந்தாலோசிக்காமல் மிகச் சிலரின் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் இந்தச் சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால், பொருளாதார நெருக்கடி நிலையில் கூட நாட்டை விட்டு வெளியேறாத முதலீட்டாளர்கள் இனிமேல் நாட்டை விட்டு வெளியேறும் மிகவும் ஆபத்தான நிலைமை ஏற்படும் எனவும் கூட்டு தொழிற்சங்க கூட்டமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

(ரெம-77)

# எட்டு மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை



இலங்கையில் நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக 8 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பதுளை, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, கேகாலை, காலி மற்றும் இரத்தினபுரி ஆகிய 8 மாவட்டங்களுக்கு இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தென்கிழக்கு அரபுக்கடல், தென்மேற்கு வங்காள விரிகுடா கடற்பிராந்தியங்களுக்குச் செல்வதை மீனவர்கள், கடல்சார் தொழில்களில் ஈடுபடுவோர் மறு அறிவித்தல்வரும்வரைத்தவிர்த்துச் செயற்பட வேண்டும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (அ)

# நாளை பாடசாலைகள் இயங்கும் என அறிவிப்பு



நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் நாளை புதன் கிழமை வழமை போன்று இடம் பெறும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

நிலவும் சீரற்ற காலநிலையால் நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளுக்கு நாளை விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என்று சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ள செய்தி போலியானது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கல்வி அமைச்சு இன்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாடசாலைகளை நடத்துவது தொடர்பான இறுதித் தீர்மானத்தை எடுக்கும் பொறுப்பு மாகாணக் கல்வி அமைச்சின்

2➤

# வரி வசூலிப்பதில் நடக்கின்ற முறைகேடுகளை ஒழிப்பதற்கு கலால் திணைக்களம் டிஜிட்டல் மயமாக்கப்படல் வேண்டும்

## கலாநிதி ஹர்ஷ டி சில்வா எம்.பி. தெரிவிப்பு



கலால் திணைக்களம் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய வரி நிலுவை சுமார் 7 பில்லியன் ரூபா என நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார். மது உற்பத்தியாளர்களிடம் வரி வசூலிப்பதில் நடைபெறுகின்ற முறைகேடுகளை தவிர்க்கவும், வரி செலுத்தாத மது உற்பத்தியாளர்களிடம் வரி வசூலிப்பதை முறைப்படுத்தவும் வேண்டுமாயின் கலால் துறையை டிஜிட்டல் மயமாக்க வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

கொழும்பில் 'எட்வேக்காட்டா' நிறுவகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட துறைசார் புலமைத்துவ விரிவுரை நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். கலாநிதி ஹர்ஷ டி சில்வா அங்கு மேலும் உரையாற்றுகையில் "வரி வசூலிப்பதற்கான முறையான டிஜிட்டல் முறை கலால்துறையிடம் இல்லை. பாரம்பரிய முறையில் அதிகாரிகள் மூலம் வரி வசூலிக்கின்றனர். பாட்டலி சம்பிக்க எம்.பியும் நானும் பல்வேறு நாடாளுமன்ற குழுக்களில் இருப்பதால் இவர்களை அழைத்து வந்து பேச முடிந்தது. நானும் பாட்டலி எம். பியும் ஒருமுறை மது ஸ்டிக்கர் பற்றிய தகவலைப் பெறச் சென்றோம். அப்போதுதான் இது பெரிய அளவிலான மோசடி என்பதை உணர்ந்தோம். இத்தகைய திருட்டு, மோசடியை ஒழிக்க இத்துறையை டிஜிட்டல் மயமாக்க வேண்டும்" என்றார். (ரெம-78)

### நாளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செயலாளர்கள் மற்றும் மாகாணக் கல்வி பணிப்பாளர்கள் வசம் உள்ளது என்றும் கல்வி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

### சுவிஸ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆகவே, இலங்கை தொடர்பான இதுவரையிலான உலக சமுதாயக் கொள்கைகளை மீளாய்வு செய்யுங்கள் என நான் கோரியுள்ளேன்.

மேலும், மலையகத் தமிழ் மக்கள் இந்நாட்டில், இந்நாள் வரை இழந்த அரசியல் சமூக சமூக உரிமைகளை மீளப்பெற சுவிட்சர்லாந்து எமக்கு உதவ வேண்டும். மலையகத் தமிழர் இந்நாட்டில் சுமார் 12 மாவட்டங்களில் பரந்து வாழும் சிறுபான்மையினர் என்றபடியால், அரசியல் யாப்பு ஏற்பாடாக நிலவரம்பற்ற சமூக சபை அமைக்கப்பட வேண்டும் என நாம் முன்மொழிவு செய்து வருகின்றோம்.

எமது இந்த முன்மொழிவுகள் செம்மையாக்கப்பட வேண்டும். அதற்காக, சுவிட்சர்லாந்து நாட்டின் நிலவரம்பற்ற சிறுபான்மையினருக்கு வழங்கபட்டுள்ள அதிகாரப் பகிர்வு அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள நாம் விரும்புகின்றோம்" - என்றுள்ளது. (அ)

### முன்னாள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டின் சனத்தொகையில் 34 இலட்சம் குடும்பங்களுக்கு 10 கிலோ அரிசியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கி வருகின்ற போதிலும் அது நாட்டின் சனத்தொகையில் 50 மூ மானோர் மாத்திரமே ஆவர். அதனை விட பெரும் பகுதியினர் தமது வாழ்க்கையை நிர்வகிக்க முடியாமல் படுகுழியில் விழுந்துள்ளனர்.

ஒரு நாட்டிற்கு மானிய முறை தவறானது என்று கூறப்பட்டாலும், வாழ்வதற்கு சிரமப்படும் மக்களுக்கு அரசு கண்டிப்பாக மானியம் வழங்க வேண்டும். உதாரணமாக, நமது அயல் நாடான இந்தியாவும் 80 மில்லியன் மக்களுக்கு மாதாந்த நிதி உதவியை ஒதுக்கீடு செய்து வருகின்றது. எனவே, கிராமப்புற வறுமையை ஒழிக்க மானியங்கள் அவசியமாகும், ஆனால் அந்த மக்களின் வாழ்க்கை தரத்தை படிப்படியாக உயர்த்துவது அரசின் பொறுப்பாகும்" என்றார். (ரெம-76)

# இராஜதந்திரக் கடவுச்சீட்டு வழக்கில் பிணையில் விடுதலையானார் டயனா



இராஜதந்திரக் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொண்டமை தொடர்பில் சந்தேகநபராகக் குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயனா கமகே பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அவர் இன்று கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் சட்டத்தரணிகளுடன் ஆஜராகியபோதே பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக நேற்று இடம்பெற்ற நீதிமன்ற அமர்வின்போது டயனா கமகேவைக் காணவில்லை என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்துக்கு அறிவித்திருந்தனர்.

இதனையடுத்தே அவர் இன்று நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தார். (அ)

# சஜித் – அனுர விவாதம் ஜூன் 6 இல்?



ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க இருவருக்குமிடையிலான விவாதத்திற்கு சஜித் தரப்பினால் முன்மொழியப்பட்ட திகதிகளுள் ஜூன் 6 ஆம் திகதி ஏற்புடையதாக இருக்கும் என கூறியுள்ள அனுரகுமார தரப்பினர், அதன்படி ஜூன் 6 ஆம் திகதி மேற்படி விவாதத்தை நடத்துவதற்கு சம்மதம் தெரிவித்துள்ளனர்.

தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்று உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனை உத்தியோக பூர்வமாக தெரிவித்துள்ளார்.

எனவே, விவாதம் நடைபெறும் இடம், நேரம் மற்றும் விவாதத்திற்கான தலைப்பு குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் விவாத குழு ஏற்பாட்டாளர் நளின் பண்டாரவுடன் கலந்துரையாடவுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டுள்ளார். (ரெம-79)

# அளவெட்டி விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம் அளவெட்டிப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அளவெட்டி வடக்கு செட்டிச்சோலைப் பகுதியில் நேற்று (20) மாலை வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றவர் படுகாயமடைந்து தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போது உயிரிழந்ததாகத. தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவர் அளவெட்டிப் பகுதியை சேர்ந்த 36 வயதான வீரசிங்கம் தயானந்தன் என்பவராவார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தெல்லிப்பழைப் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர். (04)




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# இணுவில் மக்லியோட் வைத்தியசாலைக்கு சர்வதேச விருது!



கருவள சிகிச்சையை சிறந்த முறையில் இலங்கையில் முன்னெடுக்கும் வைத்தியசாலையாக இணுவில் மக்லியோட் வைத்தியசாலை தெரிவு செய்யப்பட்டு அதற்கு சர்வதேச விருது வழங்கிவைக்கப்படுள்ளது.

டீறுஜமு என்ற அமெரிக்காவினைச் சேர்ந்த அமைப்பினால் குறித்த விருது வழங்கப்பட்டுள்ளது..

இவ்விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் இடம்பெற்றது.

இலங்கையின் வடக்கு மாகாணத்தில் கருவள சிகிச்சையினை சிறந்த முறையில் முன்னெடுக்கும் வைத்தியசாலையாக குறித்த வைத்தியசாலை 10 சர்வதேச நாடுகளினால் தெரிவு செய்யப்பட்டு இவ்விருது வழங்கிவைக்கப்பட்டது.

இவ்விருது வழங்கும் விழாவில் சர்வதேச நாடுகளின் பிரநிதிகள், அரசியல் பிராமுகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த வைத்தியசாலை 126 வருடம் பழமை வாய்ந்த வைத்திய சாலையாகக் காணப்படுகின்றமையோடு, தற்பொழுது குறித்த வைத்தியசாலையை குழந்தை சத்திரசிகிச்சை வைத்திய நிபுணர் பா.சயந்தனால் நிர்வகிக்கப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (O1)

# மே 18 தமிழின அழிப்பின் நினைவேந்தல் பிரான்ஸ் கிளிச்சி நகரில் இடம்பெற்றது



மே 18 தமிழின அழிப்பின் 15 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு பிரான்ஸ் கிளிச்சி நகரில் அமைந்துள்ள திருகோணமலையில் படுகொலை செய்யப்பட்ட பட்டினிக்கு எதிரான அமைப்பின் பணியாளர்களின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத்தூபிப் பகுதியில் இடம்பெற்றது.

கடந்த சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நினைவுத் தூபி முன்பாக பொதுச்சுடரினை

கிளிச்சி தமிழ்ச்சங்க உப தலைவர் பரராஜசிங்கம் ஏற்றிவைக்க, மாவீரர்களின் உறவுகள் ஈகைச்சுடர் ஏற்றி, மலர் வணக்கம் செலுத்தினர்.

தொடர்ந்து கிளிச்சி தமிழ்ச்சங்க உறுப்பினர்கள் நெய் விளக்கு ஏற்றி வைத்தனர்.

கிளிச்சி துணை நகரபிதா, முன்னாள் நகரபிதா மற்றும் நகரசபை உறுப்பினர்கள் இவர்களோடு,

பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு உறுப்பினர்கள், தமிழ்ச்சோலை உறுப்பினர்கள், சங்கத் தலைவர்கள்,நிர்வாகிகள், பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கிளிச்சி வாழ் தமிழ் மக்கள் கலந்து கொண்டு சுடர் ஏற்றி மலர்வணக்கம் செலுத்தியிருந்தனர்.

சிறப்புரைகள் மற்றும் நினைவுரைகளை M.Richard VINCENT conseiller municipale au devoir de mémoire Monsieur Gilles CATOIRE Ancienne Maire de CLICHY Mme Michelle CAPDET Membre de L'OEIE , எம். மக்கள் பேரவைப் பொறுப்பாளர் திருச்சோதி , கிளிச்சி தமிழ்ச்சோலை ஆசிரியை திருமதி நர்மதா அமுதன் மற்றும் தமிழ்ச்சோலை மாணவ மாணவிகள் ஆற்றியிருந்தனர்.




# மாற்றுத் திறனாளிகளை சமூக மட்டத்தில் புனர்வாழ்வளித்தல் பற்றிய கலந்தாய்வு



(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் உள்ள மாற்றுத் திறனாளிகளை சமூக மட்டத்தில் புனர்வாளித்தல் மற்றும் பிரதேச மட்ட சுய உதவி குழு தொடர்பான கலந்துரையாடல் இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி அவர்களின் தலைமையில் இன்று பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்ற குறித்த நிகழ்வில் சேருவில பகுதியில் இயங்கி வரும்" சகனசெவன" அமைப்பின் மாற்றுத் திறனாளிகளின் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு விடயங்கள் தொடர்பில் தெளிவூட்டினர். பிரதேச மட்டத்தில் சுய உதவி குழு அமைப்பின் மூலமாக தங்களது மாற்றுத் திறனாளி அமைப்புக்களை எதிர்காலத்தில் திறம்பட வலுவூட்டுவதன் மூலம் அவர்களது செயற்பாடுகளை அதிகரிப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

இதில் மாவட்ட சமூக சேவைகள் இணைப்பாளர் த.பிரணவன்,தம்பலகாமம் பிரதேச செயலக சமூக சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தம்பலகாமம் பிரதேசத்தில் உள்ள மருதம் மாற்றுத் திறனாளி சங்கத்தினர் உட்பட பெற்றார், பாதுகாவலர் என பலர் கலந்து கொண்டனர்.

# கடந்த 100 ஆண்டுகளின் பின் வடக்கில் அதிகூடிய மழைவீழ்ச்சி!
# புவியியற்துறை விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தகவல்

வடக்கு மாகாணத்தின் கடந்த 100 ஆண்டு கால காலநிலை வரலாற்றில் அதிகூடிய மே மாத மழைவீழ்ச்சி இந்த ஆண்டு மே மாதம் நிகழ்ந்துள்ளது என யாழ். பல்கலைக்கழக புவியியற்துறை விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

வங்காள விரிகுடாவில் தமிழ்நாட்டுக்கு கிழக்காக அடுத்த 36 மணி நேரத்தில் - அநேகமாக நாளை (22) காற்றமுத்தத் தாழ்வு மண்டலம் ஒன்று உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது எதிர்வரும் 23ஆம் திகதி மாலையளவில் ஒரு சிறிய புயலாகி வடக்கு வடமேற்குத் திசை நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் காரணமாக எதிர்வரும் 25 ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளிலும் கனமானது முதல் மிகக்கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. அத்துடன் அதிகளவான இடி மின்னலுடன் மழை கிடைக்கும் வாய்ப்புமுள்ளதனால் அவதானமாக இருப்பது அவசியம்.

அத்துடன் இலங்கையின் வடக்கு, கிழக்கு மற்றும் மேற்கு கரையோரங்களில் காற்றின் வேகம் மணிக்கு 40 கிலோமீற்றரை விட கூடுதலான வேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் நாளை முதல் எதிர்வரும் 25ம் திகதி வரை வடக்கு, கிழக்கு மற்றும் மேற்கு கடற்பகுதிகள் மிகவும் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்பதனால் மீனவர்கள் கடலுக்கு செல்வதைத் தவிர்ப்பது சிறந்தது. அத்துடன் பலநாட் கலங்களுடன் ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கு சென்றவர்கள் பாதுகாப்புக்கான ஏற்பாடுகளை மேற்கொள்வது சிறந்தது.

வடக்கு மாகாணத்தின் கடந்த 100 ஆண்டு கால காலநிலை வரலாற்றில் அதிகூடிய மே மாத மழைவீழ்ச்சி இந்த ஆண்டு மே மாதம் நிகழ்ந்துள்ளது. வடக்கு மாகாணத்தின் மே மாத சராசரி மழைவீழ்ச்சி 90 மி.மீ. ஆகும். மே மாத மழை நாட்கள் சராசரியாக 6 ஆகும்.

ஆனால், இவ்வாண்டு, மாதம் முடிவடைய இன்னமும் 10 நாட்கள் உள்ள நிலையில் இடஞ்சார்ந்த ரீதியில் வேறுபாடுகள் காணப்பட்டாலும் மாகாண சராசரி என்ற வகையில் இன்று வரை 230 மி.மீ. மழை கிடைத்துள்ளது. இம்மாத இறுதியில் இதன் அளவு இன்னமும் அதிகரிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.



இந்த மாதத்தின் இதுவரையான 20 நாட்களில் 12 நாட்கள் மழை கிடைத்துள்ளது. ஒப்பீட்டளவில் முல்லைத்தீவு மாவட்டத்தின் கிழக்குப் பகுதிகள், யாழ்ப்பாண மாவட்டத்தின் வலிகாமம் பகுதிகள் அதிக அளவிலான மழைவீழ்ச்சியைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது, எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## காட்டு யானை – மனித மோதலை கட்டுப்படுத்த மாதிரித் திட்டங்கள்



காட்டு யானை - மனித மோதல் அதிகம் உள்ள கிராமங்கள் மற்றும் விளைநிலங்களைப் பாதுகாக்க, தற்காலிக விவசாய மின் வேலி மற்றும் கிராம மின் வேலி என்ற இரண்டு மாதிரித் திட்டங்களைத் தொடங்க அரசு திட்டமிட்டுள்ளது.

காட்டு யானை - மனித மோதல்களைக் கட்டுப்படுத்த அண்மைக்காலமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தலைமையில் துறைசார் நிறுவனங்களின் தலைவர்களுடன் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் இது தொடர்பில் அறிவிக்கப்பட்டது.

இங்கு யானை - மனித மோதல்கள் அதிகம் உள்ள பகுதிகளில் இந்த மோதல்களைக் கட்டுப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டு பராமரிக்கப்படும் மின்சார வேலிக்கு மேலதிகமாக, மோதல்கள் அதிகம் இடம்பெறும் மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் முன்னோடித் திட்டமாக விவசாய நிலங்களைப் பாதுகாக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அறுவடை மேற்கொள்ளப்படும் சமயம் வரை மாத்திரம் உரிய விவசாய நிலங்களைப் பாதுகாக்க தற்காலிக விவசாய மின்வேலி அமைப்பதில் கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், காட்டு யானை - மனித மோதல்கள் அதிகம் உள்ள கிராமங்களைப் பாதுகாக்கும் வகையில் கிராமத்தைச் சுற்றி அமைக்கப்படவுள்ள மின்வேலிக்கான முன்னோடித் திட்டம் தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டது.

மேலும், சம்பந்தப்பட்ட விவசாயிகள் விவசாய பணிகளைத் தொடங்கும் நேரத்தில் அறுவடை செய்த பின் விவசாய மின் வேலியை அகற்ற வேண்டும் எனவும், மின்வேலியின் பராமரிப்பு மற்றும் பொறுப்பை கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு வழங்குவதுடன், கிராம வேலியின் பொறுப்பு மற்றும் பராமரிப்பு பணிகளை அந்தந்த பிரதேச செயலகங்களுக்கு வழங்குவது எனவும் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

பல்வேறு கலாசார நிகழ்வுகள் மற்றும் பெரஹறா என்பவற்றுக்காக யானைகளை வழங்குகையில் தனியாரிடமுள்ள யானைகளுக்கு மேலதிகமாக, பழக்கப்பட்ட யானைகளைக் கொண்ட பட்டியலொன்றைப் பேணுவது குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

இந்தத் தீர்மானங்களை அமுல்படுத்துவதில் எழும் சிக்கல்கள் தொடர்பான விரிவான அறிக்கையொன்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கையளிப்பதற்காகத் தயார்படுத்துமாறும் சாகல ரத்நாயக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கினார்.

வனஜீவராசிகள் மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் குணதாச சமரசிங்க மற்றும் துறைசார் நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் காட்டு யானைகள் மனிதக் கட்டுப்பாட்டுக் குழுவின் உறுப்பினர்களான கலாநிதி சுமித் பிலபிட்டிய, கலாநிதி பிரிதிவிராஜ் பெர்னாண்டோ ஆகியோரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். (அ)



## ஈரான் ஜனாதிபதியின் மறைவுக்கு அநுரகுமார திஸாநாயக்க இரங்கல்

ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்த ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் மறைவுக்கு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க இரங்கல் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள ஈரான் தூதரகத்துக்கு இன்று சென்ற அநுரகுமார திஸாநாயக்க எம்.பி., அங்கு வைக்கப்பட்ட இரங்கல் குறிப்பேட்டில் தனது இரங்கலைப் பதிவு செய்தார். (அ)

## ஈரானில் ஜனாதிபதித் தேர்தல் ஜூன் 28 இல் நடைபெறவுள்ளது



ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரய்சியின் மறைவை தொடர்ந்து, அந்நாட்டின் புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் ஜூன் 28 ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி உயிரிழந்த 50 நாட்களுக்குள் தேர்தல் நடத்தி புதிய ஜனாதிபதியை தேர்தெடுக்க வேண்டும் என்பது ஈரான் அரசியலமைப்பு சட்ட விதி. அதன்படி, தெஹ்ரானில் அமைந்துள்ள ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தேர்தலுக்கான திகதி உறுதி செய்யப்பட்டுள்ளது.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் வரும் 30 ஆம் திகதி முதல் ஜூன் 3 ஆம் திகதி வரை வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யலாம் எனவும், தேர்தலுக்கான பிரசாரம் ஜூன் 12 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை நடத்தப்படும் எனவும், இதையடுத்து ஜனாதிபதித் தேர்தல் ஜூன் 28 ஆம் திகதி நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான் - அஜா-பைஜான் எல்லையில் உள்ள அராஸ் நதியில் இரு நாடுகளும் இணைந்து கட்டிய மூன்றாவது அணையின் திறப்பு விழாவில் ஞாயிற்றுக்கிழமை பங்கேற்றுவிட்டு ஹெலிகொப்டரில் திரும்பும் போது ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரய்சி விபத்தில் சிக்கி உயிரிழந்திருந்தார். (04)

# சாய்ந்தமருது லீடர் அஷ்ரப் வித்தியாலயத்தில் குடிநீர் விநியோகமும் குழாய்க்கிணறு அமைப்பும்





(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம். அஷ்ரப் வித்தியாலயத்தின் தேவை கருதி, றஹ்மத் பௌண்டேஷன் அமைப்பினருக்கு பாடசாலை சமூகம் விடுத்த வேண்டுகோளினை ஏற்று, மாணவர்களுக்கான குடிநீர் விநியோக விஸ்தரிப்பு மற்றும் புதிய குழாய்க்கிணறுத் தொகுதியினைத் திறந்து வைக்கும் நிகழ்வும் அண்மையில் (19) பாடசாலையில் இடம்பெற்றன.

ரஹ்மத் பௌண்டேஷன் அமைப்பின் தலைவரும் முன்னாள் கல்முனை மாநகர சபை பிரதி முதல்வருமான றஹ்மத் மன்சூர் மற்றும் மலேஷிய உயர்ஸ்தானியர் பட்லி ஹிஸாம் ஆதம், அவரது பாரியார் சகிதம் கலந்து கொண்டு மேற்படி திட்டத்தினை ஆரம்பித்து வைத்தனர்.

இந்நிகழ்வில், றஹ்மத் பௌண்டேஷன் அமைப்பின் உறுப்பினர்கள், வை.டபிள்யூ.எம்.ஏ. அமைப்பின் தலைவி திருமதி பவாசா தாஹா மற்றும் அமைப்பின் செயலாளர், பொருளாளர், முன்னாள் தலைவர், அமைப்பின் ஏனைய அங்கத்தவர்கள், பிரதி அதிபர், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

மேலும் பாடசாலைச் சமூகத்தினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய, பாடசாலை மைதானத்திற்கான மைதான பார்வையாளர் இருக்கைத் தொகுதி ஒன்றை எதிர்காலத்தில் அமைத்துத் தருவதற்கான வாக்குறுதியும் இந்நிகழ்வில் கலந்து கொண்ட அமைப்பினரால் வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.



# BCAS பட்டமளிப்பு விழாவில் மாணவர்கள் கௌரவிப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

பிகாஸ் கம்பஸ் (BCAS campus) இன் பட்டமளிப்பு விழாவானது கடந்த திங்களன்று கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் காலை மாலை நிகழ்வுகளாக நடைபெற்றது.

பட்டமளிப்பு விழாவில் மொத்தம் 424 இளங்கலை மற்றும் முதுகலை பட்டதாரிகள் 622 Btec HND பட்டதாரிகள் உள்ளடங்கலாக 1046 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

25 வருட கல்விச்சேவையுடைய பிகாஸ் கம்பஸ் இன் இந்த பட்டமளிப்பு விழாவிற்கு இலங்கை பிரதமர் தினேஷ் குணவர்தன, முன்னாள் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

பிகாஸ் கம்பஸ் இன் துணை வேந்தர் பேராசிரியர் ருவான் அபேசேகர, பிரதி பொதுமுகாமையாளர் சூரிய விபிலே, மாஸ்டர் கார்ட் – இலங்கையின் பணிப்பாளர் திருமதி மகேசா அமரசூரிய மற்றும் பேராசிரியர்கள், விரிவுரையாளர்களும் கலந்து கொண்டனர்.




# சாய்ந்தமருதிலிருந்து முதலாவது ஹஜ் குழு இன்று பயணமானது



(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருதிலிருந்து முதலாவது ஹஜ் குழு பண்டாரநாயக சர்வதேச விமான நிலையத்திலிருந்து இன்று செவ்வாய்க்கிழமை அதிகாலை மக்கா நோக்கிப் பயணமானது.

இவர்கள் சாய்ந்தமருது - மாளிகைக்காடு பெரிய ஜும்ஆ பள்ளிவாசலில் இருந்து துவாப் பிரார்த்தனைகளுடன் நேற்றுக்காலை வழியனுப்பி வைக்கப்பட்டிருந்தனர்.

# நுவரெலியா மாவட்டத்தில் காலநிலை மாற்றம் பெருமழையினால் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

நுவரெலியா மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றம் காரணமாக பெய்து வரும் கடும் காற்றுடன் கூடிய இடைவிடாத பெரும் மழையினால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தின் நுவரெலியா, கொத்மலை, வலப்பனை, ஹங்குராங்கெத்த மற்றும் அம்பகமுவ பிரதேசங்களில் வானிலை மாற்றம் ஏற்பட்டு கடும் மழை பெய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் நுவரெலியா, கொத்மலை, வலப்பனை பிரதேசங்களில் கடும் காற்றுடன் கூடிய கனமழை நேற்றுக் காலை (20) முதல் தொடர்ச்சியாக பெய்து வருவதை அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.



இதன் காரணமாக இப்பிரதேசங்களில் காட்டாறுகள் ஆறுகள், மற்றும் குளங்களில் மழை நீர் நிரம்பியுள்ளதுடன் நீர்த்தேக்கங்கள் நீர் மட்டம் உயர்ந்து காணப்படுகிறது. மேலும் இறம்பொடை, மற்றும் ஹைபொரஸ்ட் குருந்து ஓயா, டெவோன் ஆகிய நீர்வீழ்ச்சிகளில் அதிகளவான நீர் வீழ்ந்தெழும்பும் அழகையும் அவதானிக்ககூடியதாக இருக்கிறது.

அதேநேரத்தில் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்து வரும் நிலையில் பிரதான வீதியோரங்களில் காணப்படும் பாரிய மரங்கள் முறிந்து விழக்கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படுவதால் பிரதான வீதிகளில் பயணிக்கும் மக்கள் மற்றும் வாகனங்களை செலுத்தும் சாரதிகள் அவதானத்துடன் செயல்படுமாறு அப்பகுதி பொலிஸார்களினால் எச்சரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது.

அத்துடன் புகை மூட்டம் அவ்வப்போது அதிகரிப்பதனால் நுவரெலியா- டொப்பாஸ் வழியிலன கண்டி வீதி, நுவரெலியா- உடப்புசலாவ வீதி, நுவரெலியா-தலவாக்கலை வீதிகளில் பயணிக்கும் வாகனங்கள் முகப்பு விளக்கை ஔிரவிட்டு பயணிக்கவும் பொலிஸார் எச்சரிக்கையும், வேண்டுகோளும் விடுத்து வருகின்றனர்.

அதேநேரத்தில் கடும் காற்று மற்றும் கடும் மழை தொடர்ச்சியாக பெய்வதனால் தேயிலை மலைகளில் தொழில் செய்து வரும் தொழிலாளர்கள் அவதானமாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதேபோல நுவரெலியா மாவட்டத்திற்கு மண் சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில் ஆற்று ஓர பகுதிகளிலும், மண்மேடு பகுதிகள், பாரிய மரங்கள் உள்ள பகுதிகளில் வசிக்கும் குடியிறுப்பாளர்கள் அவதானமாக இருக்குமாறு நுவரெலியா மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் பொது மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேலும் இக்காலப்பகுதியில் அனர்த்தங்கள் ஏற்படகூடிய இடங்கள் அவதானிக்கப்பட்டால் இது தொடர்பில் அந்தந்த பிரதேச கிராம சேவை அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவர பொதுமக்கள் முன்வர வேண்டும் எனவும் நுவரெலியா பிரதேச செயலகம் அறிவித்தல் விடுத்துள்ளது.

அத்துடன் காலநிலை மாற்றம் ஏற்பட்டுள்ள இக்காலப்பகுதியில் இம்மாவட்டத்தில் விவசாயம் பாதிக்கப்பட்டு வருவதுடன் விவசாயிகளும், விவசாய தோட்டங்களில் அன்றாட தொழிலை செய்து வருபவர்களும் வருமான ரீதியில் பாதிப்புக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (கே)

# மேல்மாகாணத்தில் பணிப்புறக்கணிப்பால் வைத்தியசாலைகளில் பொதுமக்கள் சிரமம்

சுகாதாரத் துறையின் 72 தொழிற்சங்கங்கள் ஆரம்பித்த பணிப்புறக்கணிப்புப் போராட்டம் இன்று செவ்வாய்க்கிழை மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள தாமதமே பணிப்புறக்கணிப்பிற்கு காரணம் என சுகாதாரத் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரை மேல் மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளில் அடையாளப் பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டிருந்தது.

சுகாதார தொழிற்சங்கங்கள் ஆரம்பித்த இந்த தொழிற்சங்க நடவடிக்கை கடந்த வியாழக்கிழமை வடமத்திய மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டு, தற்போது மாகாணங்கள் தோறும் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (04)








## மனைவியைக் கொலைசெய்தவர் பொலிசாரின் தேடலில் சிக்கினார்!

மனைவியைக் கொலை செய்தார் என்ற சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக லுணுகலை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம்(19) லுணுகலை ஜனதாபுர தம்பபிட்டிய வத்த, கும்புக்கன் ஓயவில் 38 வயதுடைய 2 பிள்ளைகளின் தாய் ஒருவர் தலைப் பகுதியில் காயமடைந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

குறித்த பெண்ணின் 17 வயதுடைய மகள், தனது தாயின் மரணத்தில் சந்தேகம் உள்ளதாக பொலிஸாரிடம் கூறியுள்ளார். இதன்போது மரணத்தில் சந்தேகம் கொண்ட பொலிஸாரும் தீவிர விசாரணைகளை மேற்கொண்ட போது, சந்தேக நபர் தப்பிச் செல்ல உதவிய 36 வயதுடைய முச்சக்கர வண்டி சாரதி ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் தலைமறைவாகி இருந்த லுணுகலை ஜனதாபுர தம்பபிட்டிய பகுதியைச்சேர்ந்த குறித்த பெண்ணின் 45 வயதுடைய கணவர் நேற்று இரவு லுணுகலை நகரில் வைத்து லுணுகலை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணையின் போது முதலில் சிறிய கல் ஒன்றினால் தலைப் பகுதியைத் தாக்கியதாகவும், பின்னர் பெரிய கல் ஒன்றினால் தாக்கிக் கொலை செய்ததாகவும் சந்தேக நபர் தெரிவித்ததாக பொலிஸார் குறிப்பிட்டனர். இருவருக்கும் இடையே நீண்ட காலமாக குடும்பத் தகராறு காணப்பட்டதாகவும், இருவருக்கும் இடையே விவாகரத்து வழக்கு நடைபெற்று வருவதாகவும் பெண்ணின் வீட்டுப் பகுதிக்கு குறித்த நபர் செல்லக் கூடாது என நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (04)

## தெமோதர நெதர்வில் பகுதியில் நடந்த மோதலில் ஒருவர் மரணம்!

எல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெமோதர நெதர்வில் பகுதியில் நேற்று (20) இரவு இரு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதல்களில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக எல்ல பொலிஸார் தெரிவித்தனர். 38 வயதுடைய இரண்டு பிள் ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர். இரு குழுக்களுக்கிடையில் நீண்ட காலமாக நிலவி வந்த வாக்குவாதம் நேற்று இரவு மோதலாக மாறியதாகப் பொலிஸார் தெரிவித்தனர் குறித்த நபரை சவள் கொண்டு தாக்கியே கொலை செய்துள்ளதாகவும் சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் இருவரிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட சவளைப் பொலிஸார் கைப்பற்றியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவரின் சடலம் தெமோதர கிராமிய வைத்தியசாலைப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும், நீதவானின் பரிசோதனையின் பின்னர், பிரேத பரிசோதனைக்காக பதுளை போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லவுள்ளதாகவும் பொலிஸார் கூறினர். பதுளை மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் உபுல் சந்தன, பண்டாரவளை பிரிவின் சிரேஷ்ட அத்தியட்சகர் பிரதீப் கலுபான மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் சில்வா ஆகியோரின் பணிப்புரையின் பேரில் எல்ல பொலிஸ் நிலைய உதவிப் பொலிஸ் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஏ.எம்.மயூரசிங்க உள்ளிட்ட குழுவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுப்பதாகத் தெரியவந்துள்ளது. (04)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.05.2024இல் வெளியிடப்பெற்றது.